**டிசம்பர் – 17**

# TNPSC துளிகள்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் செயல்படும் இந்தியாவின் தேசிய குவாண்டம் தொடர்பு மையமான IITM C-DOT சாம்ஞா டெக்னாலஜிஸ் அறக்கட்டளையைத் துவக்கியுள்ளது.
- சென்னை பெருநகரப் பகுதி முழுவதும் தூய்மையான, பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொதுப் போக்குவரத்தை வழங்குவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) சுமார் 240 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான புதிய கடனை அங்கீகரித்துள்ளது.
  - இந்தத் தொகையானது, 2022 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கான ADB வங்கியின் 780 மில்லியன் டாலர் பல்பிரிவு நிதி வசதியின் ஒரு பகுதியாகும்.
- இந்தியக் கடற்படையானது, கொச்சியில் முதன்முதலில் உள்நாட்டிலேயே கட்டமைக்கப் பட்ட DSC A20 எனப்படும் ஆழ்கடல் ஆய்வு உதவி கர கப்பலினை இயக்க உள்ளது.
- பேரரசர் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர் (சுவரன் மாறன் என்றும் அழைக்கப் படுகிறார்) நினைவாக ஒரு நினைவு தபால் தலையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
  - அவர் கி.பி 7 மற்றும் 9 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் தமிழ்நாட்டின் மத்தியப் பகுதிகளை ஆண்ட முத்தரையர் வம்சத்தைச் சேர்ந்தவர் ஆவார்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மக்களை மையமாகக் கொண்ட பருவநிலை ஆளுகை

- தமிழ்நாடு அரசானது, சமூக அடிப்படையிலான கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு (CbMRV) மூலம் மக்கள் முன்னணித்துவத்திலான பருவநிலை நுண்ணறிவு அமைப்பைத் தொடங்கியுள்ளது.
- கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்ப்பு (MRV) என்பது பருவநிலை மாற்றத் தாக்கங்கள், தகவமைப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் விளைவுகளைக் கண்காணிக்கப் பயன்படுகிறது.
- இந்த முன்னெடுப்பு 2023 ஆம் ஆண்டில் துரிதப்படுத்தப்பட்ட பருவநிலை மாற்றங்களுக்கான ஐக்கியப் பேரரசு கூட்டாண்மை (UK PACT) திட்டத்தின் கீழ் தொடங்கியது.
- இது சமூகத்தால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் தரவை மாநிலப் பருவநிலை ஆளுகையில் ஒருங்கிணைக்கிறது.
- இந்த மூன்று பகுதிகளும் சோதனைப் பிரிவுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன:
  - நீலகிரியில் உள்ள அரக்கோடு (மலைக் காடுகள்),
  - ஈரோட்டில் உள்ள வெள்ளோடு (வேளாண் மற்றும் ஈரநிலங்கள்), மற்றும்
  - கடலூரில் உள்ள கிள்ளை (கடலோர மற்றும் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகள்).
- மழைப்பொழிவு, வெப்பநிலை, மண், நீர், பல்லுயிர், வேளாண்மை, மீன்வளம், வாழ்வாதாரங்கள் மற்றும் கார்பன் இருப்பு பற்றியத் தரவுகளை இந்தச் சமூகங்கள்

சேகரிக்கின்றன.

- பாரம்பரிய சுற்றுச்சூழல் அறிவு அறிவியல் களக் கண்காணிப்பு முறைகளுடன் பயன்படுத்தப் படுகிறது.
- இந்தத் தரவுகள் ஆனது உள்ளூர் திட்டமிடல், பேரிடர் தயார்நிலை மற்றும் பருவநிலை ஏற்புத் திட்டங்களை ஆதரிக்கிறது.
- இந்த முன்னெடுப்பு ஆனது, தமிழ்நாட்டில் நீண்டகால சமூக அடிப்படையிலான பசுமைப் பணியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## முன்னணி சுற்றுலா தலங்கள்





- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திருச்சி மாவட்டம் தமிழ்நாட்டின் முன்னணி சுற்றுலா தலமாகத் திகழ்ந்தது.
- சுற்றுலாத் துறையின் கூற்றுப்படி, ஆகஸ்ட் மாதத்தில் திருச்சி 23.09 லட்சம் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தது.
- திருச்சிக்கு வந்த மொத்த பார்வையாளர்களில், 22.94 லட்சம் பேர் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள், 14,706 பேர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆவர்.

- ❖ மதுரை மாவட்டம் 21.65 லட்சம் சுற்றுலாப் பயணிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது என்பதோடு அந்த மாவட்டத்தில் சுமார் 1.53 லட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பதிவாகினர்.
- ❖ தூத்துக்குடி 21.10 லட்சம் சுற்றுலாப் பயணிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து 20.16 லட்சம் சுற்றுலாப் பயணிகளுடன் இராமநாதபுரம் உள்ளது.
- ❖ திருச்சி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற முக்கிய சுற்றுலா மாவட்டங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்கள் மற்றும் சமய தளங்களுக்குப் பெயர் பெற்றவை ஆகும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் வறுமை - புதிய ஆராய்ச்சி அறிக்கை




- ❖ இந்தப் புதிய ஆய்வறிக்கையை, கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியரும் பதினாறாவது நிதி ஆணையத் தலைவருமான அரவிந்த் பனகாரியா மற்றும் பிறர் தயாரித்தனர்.
- ❖ 2011-12 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியா தீவிர வறுமை நிலையை "முற்றிலும் ஒழித்துள்ளது".
- ❖ 2011-12 ஆம் ஆண்டில் 21.9% (மக்கள் தொகையில்) ஆக இருந்த தேசிய வறுமை விகிதம் 2023-24 ஆம் ஆண்டில் 2.3% ஆகக் குறைந்துள்ளது.
- ❖ இது 12 ஆண்டுகளில் 19.7 சதவீதப் புள்ளிகள் அல்லது ஆண்டிற்கு 1.64 சதவீதப் புள்ளிகள் சரிவு ஆகும்.
- ❖ உலக வங்கியானது, தீவிர வறுமை நிலையை வாங்கும் சக்தி சமநிலை (PPP) அடிப்படையில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 3 டாலருக்கும் குறைவான வருவாயுடன் வாழ்வது என்று வரையறுக்கிறது.
- ❖ இந்தப் பேராசிரியர்களின் கூற்றுப்படி, இது கடைசியாக அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்ட வறுமைக் கோடான டெண்டுல்கர் வறுமைக் கோட்டிற்கு அருகில் உள்ளது.
- ❖ டெண்டுல்கர் முறையை அடிப்படையாகக் கொண்ட தேசிய (கிராமப்புற+நகர்ப்புற) வறுமைக் கோடு 2011-12 ஆம் ஆண்டில் ஒரு நபருக்கு மாதத்திற்கு 932 ரூபாயாகவும்,

2022-23 ஆம் ஆண்டில் 1,714 ரூபாய் ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 1,804 ரூபாய் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

- ❖ இந்துக்களிடையே வறுமை விகிதம் 2.3% ஆகவும், முஸ்லிம்களுக்கு இது 1.5% ஆகவும், கிறிஸ்தவர்களுக்கு 5% ஆகவும், பௌத்தர்களுக்கு 3.5% ஆகவும், சீக்கியர்கள் மற்றும் சமணர்களுக்கு 0% ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கல்லீரல் நோய்க்கான முதல் AI கருவி





- ❖ AIM-NASH என்பது கடுமையான கொழுப்பு கல்லீரல் நோயை மதிப்பிடுவதற்கு என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (FDA) தகுதி பெற்ற முதல் AI கருவி ஆகும்.
- ❖ வளர்சிதை மாற்றச் செயலிழப்பு தொடர்பான மது பழக்கம் சாரா கொழுப்பு ஈரலழற்சி/ஸ்டீட்டோஹெபடைடிஸ் (MASH) பாதிப்பில் கொழுப்பு குவிப்பு, வீக்கம் மற்றும் வடு ஆகியவற்றைக் கண்டறிய கல்லீரல் பயாப்ஸி படங்களை இது பகுப்பாய்வு செய்கிறது.
- ❖ இறுதி நோயறிதலுக்காக மருத்துவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்ட தரப்படுத்தப் பட்ட மதிப்புகளை உருவாக்க இந்தக் கருவி உள்ளார்ந்த கற்றல் வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது.
- ❖ FDA தகுதி ஆனது MASH மருத்துவப் பரிசோதனைகளை துரிதப்படுத்தும், சோதனை காலக்கெடுவைக் குறைக்கும் மற்றும் பல மனித ஆய்வுகளை நம்பியிருப்பதைக் குறைக்கும்.
- ❖ AIM-NASH ஆனது துல்லியத்திற்காக மனித மேற்பார்வையைப் பேணும் அதே வேளையில் மருந்து உருவாக்கத்தில் செயற்கை நுண்ணறிவின் வளர்ந்து வரும்

பங்கை நிரூபிக்கிறது.

## கூகுளின் குவாண்டம் எக்கோஸ் பரிசோதனை

- கூகுள் நிறுவனமானது, அதன் 65-குவிட் வில்லோ குவாண்டம் செயலியைப் பயன்படுத்தி ஒரு குவாண்டம் எக்கோஸ் பரிசோதனையை நடத்தியது.
- ஒரு குவாண்டம் அமைப்பிற்குள் குவாண்டம் தகவல் எவ்வாறு பரவுகிறது மற்றும் திரும்புகிறது என்பதை இந்தச் சோதனை ஆய்வு செய்தது.
- இந்தத் தகவல் ஒட்டத்தை அளவிட அறிவியலாளர்கள் ஒரு Out-of-Time-Order Correlator (OTOC) நுட்பத்தினைப் பயன்படுத்தினர்.
- இந்தச் சோதனை ஆனது குவாண்டம் கணினிகள் இன்றையக் குறியாக்கத்தை உடைக்கக் கூடிய Q-Day பற்றிய கவலையை அதிகரித்தது.




## AviSpray-10c வேளாண் பயன்பாட்டு ஆளில்லா விமானம்





- சென்னையைச் சேர்ந்த புதிய தொழில்நுட்ப நிறுவனமான AvironiX ட்ரோன்ஸ், AviSpray-10c எனப்படும் அடுத்த தலைமுறை நுட்பத்திலான வேளாண் பயன்பாட்டு ஆளில்லா

விமானத்தினை அறிமுகப்படுத்தியது.

- இந்த ஆளில்லா விமானம் சுமைப்பைப/முதுகுப்பை அளவிலான மற்றும் ஒரு நபர் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற நிலையில் இது எளிதில் சுமந்து செல்லக் கூடிய தன்மையை மேம்படுத்தி செயல்பாட்டுச் செலவுகளைக் குறைக்கிறது.
- AviSpray-10c வழக்கமான வேளாண் பயன்பாட்டு ஆளில்லா விமானங்களை விட 53% சிறியது மற்றும் ஒரு முறை மின்னேற்றம் செய்யப்பட்டால் 5 ஏக்கர் பரப்பளவு வரை செயல்படக் கூடியது.
- ஜப்பானிய 'ஜென்சி ஜென்புட்சு' தத்துவத்தைப் பின்பற்றி 6,000 ஏக்கருக்கும் அதிகமான இந்திய வேளாண் நிலங்களில் மருந்து தெளிப்பதன் மூலம் இந்த ஆளில்லா விமானம் சரி பார்க்கப்பட்டது.
- இது ஹெக்ஸாகாப்டர் கட்டமைப்பு, மாற்றக் கூடிய தேக்கிகள், நிலப்பரப்பைப் பின்பற்றும் ரேடார் மற்றும் மோதல்-தவிர்ப்பு போன்ற அம்சங்களுடன் முழுமையாக இந்தியாவில் கட்டமைக்கப் பட்டுள்ளது.

## சந்திரனில் செயலில் உள்ள பிளாஸ்மா





- இஸ்ரோவின் சந்திரயான்-3 பயணத்தின் RAMBHA-LP ஆனது சந்திரனின் தென் துருவப் பகுதியில் செயலில் உள்ள பிளாஸ்மா சூழலைக் கண்டறிந்தது.
- இது விக்ரம் தரையிறங்குக் கலத்தில் உள்ள ஒரு கருவியாகும்.
- RAMBHA-LP என்பது Radio Anatomy of Moon Bound Hypersensitive Ionosphere and Atmosphere-லாங்முயர் ஆய்வுக் கருவி என்பதைக் குறிக்கிறது.
- பிளாஸ்மா என்பது அயனிகள் மற்றும் தடையற்ற எலக்ட்ரான்கள் போன்ற மின்னேற்றம் செய்யப்பட்ட துகள்களைக் கொண்டுள்ள பருப்பொருளின் நான்காவது

நிலையாகும்.

- RAMBHA-LP சந்திர மேற்பரப்புக்கு அருகில் எலக்ட்ரான் அடர்த்தி மற்றும் எலக்ட்ரான் வெப்பநிலையை அளவிடுகிறது.
- அங்கு பதிவு செய்யப்பட்ட எலக்ட்ரான் அடர்த்தி ஒரு கன சென்டிமீட்டருக்கு 380–600 துகள்கள், மற்றும் எலக்ட்ரான் வெப்பநிலை 3,000–8,000 கெல்வின் ஆகும்.

## GlowCas9 புரதம்


- GlowCas9 என்பது கொல்கத்தாவின் போஸ் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு உயிரி ஒளிர்வு CRISPR-Cas9 புரதம் ஆகும்.
- இது Cas9 என்பதை, Cas9 புரதம் செயல்படும் போது ஒளியை வெளியிடுகின்ற ஆழ்கடல் இறாலில் இருந்து பிளவுபட்ட நுண்ணிய லூசிஃபெரேஸ் துண்டுகளுடன் இணைக்கிறது.
- இந்த அமைப்பு அவைகளுக்கு தீங்கு விளைவிக்காமல் உயிருள்ள செல்கள், திசுக்கள் மற்றும் தாவர இலைகளுக்குள் மரபணு-திருத்தும் செயல்பாட்டை நிகழ்நேரக் கண்காணிப்பை அனுமதிக்கிறது.
- அதிக வெப்ப நிலைத்தன்மையைக் கொண்டுள்ள GlowCas9 அமைப்பு ஒப்புமையால் இயக்கப்பட்ட பழுதுபார்ப்பை மேம்படுத்துகிறது என்ற நிலையில் இது துல்லியமான டிஎன்ஏ திருத்தத்தை மேம்படுத்துகிறது.
- இந்தத் தொழில்நுட்பம் நிகழ்நேரத்தில் நிகழும் சிகிச்சை சார் மரபணு திருத்தத்தை அறிவியலாளர்கள் கவனிக்க அனுமதிக்கின்ற தெரட்ராக்கிங்கை செயல்படுத்துகிறது.




## முதல் பில்லியன் ஆண்டுகள் பழமையான மீவொளிர் விண்முகில்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST) ஆனது பேரண்டத்தில் பதிவு செய்யப் பட்ட முதல் மீவொளிர் விண்முகிலைக்/சூப்பர்நோவாவைக் கண்டறிந்தது.
- பெருவெடிப்பிற்குப் பிறகு பேரண்டத்தின் முதல் பில்லியன் ஆண்டுகளுக்குள் சூப்பர் நோவா ஏற்பட்டது.
- ஒரு பெரிய, குறைந்த உலோகத்தன்மை கொண்ட நட்சத்திரத்தின் மைய வெடிப்பை சான்றுகள் சுட்டிக் காட்டுகின்றன.
- ஆரம்பகால சூப்பர்நோவாக்கள் கிரகங்கள் மற்றும் சிக்கலான வேதியியலுக்கு மிக அவசியமான கனமான கூறுகளை வழங்கின.
- இந்த நிகழ்வு அடர்த்தியான, வேகமான நட்சத்திரம் உருவாக்க அண்டத்தில் நிகழ்ந்தது

என்பதோடு ஆரம்பகால அண்டப் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய நுண்ணறிவுகளை இது வழங்குகிறது.




## MAVEN செவ்வாய்க் கிரகத் திட்டம் குறித்த தகவல்





- நாசா நிறுவனமானது, MAVEN (Mars Atmosphere and Volatile EvolutioN) விண்கலத்துடனான தொடர்பை இழந்துள்ளது.
- MAVEN அதன் இயல்பான சுற்றுப்பாதையில் செவ்வாய்க் கிரகத்தின் பின்னால் சென்ற

பிறகு தொடர்பு கொள்வதை நிறுத்தியது.

- இந்த விண்கலம் 2013 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்டு 2014 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகச் சுற்றுப்பாதையில் நுழைந்தது.
- MAVEN செவ்வாய்க் கிரகத்தின் மேல் வளிமண்டலத்தையும் சூரியக் காற்றுடனான அதன் தொடர்புகளையும் ஆய்வு செய்தது.
- இது பில்லியன் கணக்கான ஆண்டுகளில் செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலத்தின் பெரும்பகுதியை எவ்வாறு இழந்தது என்பதை விளக்க உதவியது.
- MAVEN ஆனது, கியூரியாசிட்டி மற்றும் பெர்சீவரன்ஸ் போன்ற செவ்வாய்க் கிரக உலாவிக் கலங்களுக்கான தொடர்பு நிலை மாற்றி ஆகவும் செயல்பட்டது.

## GRASSROOT பக்கவாதச் சோதனை





- டெல்லியில் உள்ள எய்ம்ஸ் நிறுவனமானது, கடுமையான பக்கவாத சிகிச்சைக்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மூளை ஸ்டெண்டின் மீதான இந்தியாவின் முதல் பிரத்தியேக மருத்துவப் பரிசோதனையை நடத்தியது.
- GRASSROOT என பெயரிடப்பட்ட இந்தச் சோதனை, கிராவிட்டி மெடிக்கல் டெக்னாலஜி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட சூப்பர்நோவா ஸ்டென்ட்-ரெட்ரீவரை மதிப்பீடு செய்தது.
- GRASSROOT என்பது Gravity Stent-Retriever System for Reperfusion of Large Vessel Occlusion Stroke Trial என்பதைக் குறிக்கிறது.
- இது இஸ்கிமிக் பக்கவாதத்தின் (மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு) உயிருக்கு ஆபத்தான பாதிப்பான பெரு நாள அடைப்பு (LVO) பக்க வாதங்களின் மீது

கவனம் செலுத்தியது.

- ❖ சூப்பர்நோவா சாதனம் என்பது மூளை தமனிகளில் இருந்து இரத்தக் கட்டிகளை அகற்றப் பயன்படுத்தப்படும் ஒரு ஸ்டென்ட்-ரெட்ரீவர் ஆகும்.
- ❖ இந்த முடிவுகள் அதிகப் பாதுகாப்பு மற்றும் செயல்திறனைக் காட்டின.
- ❖ உள்நாட்டுத் தரவுகளின் அடிப்படையில், CDSCO (மத்திய மருந்துகள் தரநிலைக் கட்டுப்பாட்டு அமைப்பு) மருத்துவப் பயன்பாட்டிற்கான சூப்பர்நோவா ஸ்டெண்டை அங்கீகரித்தது.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## BNHS கழுகு வெளியீட்டுத் திட்டம்




- ❖ பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் (BNHS) ஆனது 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அசாமில் மிகவும் அருகிய இனம் என்ற நிலையில் உள்ள ஆறு கழுகுகளை வெளியிட உள்ளது.
- ❖ இந்த வெளியீட்டில் காப்பகத்தில் வளர்க்கப்பட்ட மூன்று மெலிந்த அலகு கொண்ட கழுகுகள் மற்றும் மூன்று வெண் முதுகுக் கழுகுகள் அடங்கும்.
- ❖ காம்ரூப் மாவட்டத்தின் இராணியில் உள்ள BNHS கழுகு வளங்காப்பு இனப்பெருக்க மையத்தில் இந்தக் கழுகுகள் வளர்க்கப்பட்டன.
- ❖ அவை அசாமின் காம்ரூப் மற்றும் பிஸ்வநாத் மாவட்டங்களில் மிதமான நடைமுறை முறை மூலம் விடுவிக்கப்படும்.
- ❖ கழுகுகளின் எண்ணிக்கையை அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் மீட்டு

எடுப்பதும் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

### மேற்கு டிராகோபன் வளங்காப்பு




- மேற்கு டிராகோபனின் காப்பகத்திலான இனப்பெருக்கம் ஆனது அதன் எண்ணிக்கையை நிலைப்படுத்த உதவியது என்பதோடு ஆனால் அதன் நீண்ட கால உயிர் வாழ்விற்கு வாழ்விடப் பாதுகாப்பு அவசியம் ஆகும்.
- மேற்கு டிராகோபன் (டிராகோபன் மெலனோசெபாலஸ்) இந்தியாவின் அரிதான ஃபெசண்ட்களில் ஒன்றாகும் மற்றும் அது இமாச்சலப் பிரதேசத்தின் மாநிலப் பறவை ஆகும்.
- இது ஜம்மு & காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரக்காண்ட் மாநிலங்களின் சிறிய வனப்பகுதிகளில் காணப்படுகிறது.
- இந்த இனமானது IUCN (சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம்) செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய (VU) இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- நன்கு வளர்ந்த சுமார் 3,000–9,500 பறவைகள் காடுகளில் உயிர்வாழ்வதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- முதல் வெற்றிகரமான காப்பகத்திலான இனப்பெருக்கம் 2005 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேசத்தின் சரஹான் ஃபெசன்ட்ரியில் அடையப்பட்டது.

## மாநிலச் செய்திகள்

### கர்நாடக சமூகப் புறக்கணிப்பு மசோதா 2025

- கர்நாடக சமூகப் புறக்கணிப்பு (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) மசோதா, 2025 ஆனது, தனி நபர்கள், குடும்பங்கள் அல்லது குழுக்கள் மீது விதிக்கப்படும் சமூகப் புறக்கணிப்பு நடைமுறைகளை குற்றமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சாதிப் பஞ்சாயத்துகள் மற்றும் முறைசாராத சமூக அமைப்புகளால் செயல் படுத்தப்படும் புறக்கணிப்புகளை உள்ளடக்கியது.
- சமூகப் புறக்கணிப்பை விதிக்கும், வழி நடத்தும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு நபரும் குற்றவாளியாகக் கருதப்படுவார்.

- இதற்கான தண்டனையில் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது 1 லட்சம் ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் அடங்கும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் அமலாக்கத்தை உறுதி செய்வதற்கும் ஒரு சமூகப் புறக்கணிப்புத் தடை அதிகாரியை நியமிப்பதற்கு இந்த மசோதாவானது விதிமுறையை வழங்குகிறது.




## இதரச் செய்திகள்


### நெருப்பு உருவாக்கத்திற்கான பழமையான அறியப்பட்ட சான்றுகள்




- சுமார் 400,000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தின் கிழக்கில் நிகழ்ந்த மனிதனால் உருவாக்கப் பட்ட தீ விபத்துக்கான ஆரம்பகால நிகழ்வை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

- பார்ன்ஹாம் கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு முன்னாள் களிமண் குழியாக இருந்த இந்த இடத்தில், சுமார் 415,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால்களால் செய்யப் பட்ட ஓர் அடுப்பு உள்ளது.
- அவர்கள் ஓர் அடுப்பை உருவாக்கும் ஒரு சுடப்பட்ட பூமி, வெப்பத்தால் உடைக்கப்பட்ட கைக்கோடரிகள் மற்றும் டிண்டரை ஒளிரச் செய்வதற்கு தீப்பொறிகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வகை கல்லான இரண்டு பைரைட் துண்டுகள் ஆகியவற்றைக் கண்டறிந்தனர்.
- இதுவரையில், வடக்குப் பிரான்சில் உள்ள ஒரு தளத்தில் மனிதர்கள் நெருப்பை உருவாக்கியதற்கான ஆரம்பகாலச் சான்றுகள் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்னதானவையாகும் என்பதோடு இது நியாண்டர்தால்களுடன் தொடர்புடையது.

## உலகளாவிய AI தரவரிசை




- செயற்கை நுண்ணறிவில் உலகின் மூன்றாவது மிகவும் போட்டித் தன்மை வாய்ந்த நாடு இந்தியா ஆகும்.
- இது ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் உலகளாவிய AI ஆற்றல் கருவியை அடிப்படையாகக் கொண்டது.
- இந்தியா 21.59 மதிப்பெண்களைப் பெற்று, அமெரிக்கா (78.6) மற்றும் சீனா (36.95) ஆகியவற்றிற்கு அடுத்தப்படியாக உள்ளது.
- இந்தத் தரவரிசை திறமை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, முதலீடு, கொள்கை, உள் கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத் தாக்கம் போன்ற பல காரணிகளைக் கருத்தில் கொள்கிறது.

- ❖ தென் கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஐக்கியப் பேரரசு மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளை விட இந்தியாவின் மதிப்பெண் அதிகமாக உள்ளது.

## விஜய் திவாஸ் 2025




- ❖ இது வங்காளதேசம் உருவாக வழி வகுத்த 1971 ஆம் ஆண்டு போரில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் வெற்றியைக் குறிக்கிறது.
- ❖ 93,000 பாகிஸ்தான் படைகள் சரணடைந்து, 13 நாட்கள் போரை முடிவுக்குக் கொண்டு வந்தன.
- ❖ இது இந்திய ஆயுதப் படைகளின் துணிச்சலையும் தியாகத்தையும் கௌரவிக்கும் தினமாகும்.
- ❖ மேற்கு வங்காளத்திலும் வங்காளச் சமூகங்களிடையேயும், இது பிஜோய் திபோஷ் என்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ 1999 ஆம் ஆண்டு கார்கில் போரை நினைவு கூரும் வகையில் ஜூலை 26 ஆம் தேதி அன்று கார்கில் விஜய் திவாஸ் என்ற தொடர்புடைய ஒரு அனுசரிப்பு கொண்டாடப் படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★